1982 மார்ச் 6]

தருமபுரி அரசு தலைமை மருத்துவமனை

*வினா எண். 391—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தருமபுரி தலைமை அரசு மருத்துவமனையில் இருதய நோய் மருத்துவப்பிரிவு ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) தருமபுரி அரசு தலைமையிட மருத்துவமனையில் ஒரு ஐ. சி. சி. யூனிட் (I.C.C. Unit) ஏற்படுத்த 1981 மே மாதத்தில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் முடிந்த பின்னர் இந்தப் பிரிவு திறக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்தில் எத்தனை மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இந்த இருதய மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது என் பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 8 மெடிகல் காலேஜ்ஸ் இருக்கின்றன. அந்த 8 கல்லூரிகளோடு இணைந்து இருக்கும் மருத்துவமனைகளில் இந்த ஐ.சி.சி. யூனிட்டுகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், கவர்ன்மென்ட் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ் பிடல்கள், சேலத்திலும், திருச்சியிலும் மற்றும் வேலூரிலும் இருக் கின்றன. தருமபுரி மாவட்டத்தில் இப்போது துவங்க இருக் கிறோம். கட்டிட வேலைகள் முடிந்தவுடன் ஆரம்பிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆறுகளில் சாக்கடை நீர் மற்றும் ஆலைக்கழிவுகள் கலப்பதைத் தடை செய்யும் சட்டம்.

*வினா 392—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சாக்கடைநீர், ஆலைக்கழிவுகளை ஆற்றுநீரில் கலப்பதை தடைசெய்ய சட்டம் இயற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மைய அரசின் 1974-ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தை நமது அரசு பின்பற்றலாம் என்று 1981 ஆம் ஆண்டு